www.tamilarangam.net


# துக்ளக்

Vol. XVIII No. 4 1.3.87


காரியாலயம்:
757, மவுண்ட் ரோடு,
சென்னை-600 002.


## இந்த இதழில் விசேஷ அம்சங்கள்


ஆரோக்கிய வாழ்க்கைக்கு உத்தமமான நண்பன் 6-ம் பக்கம்; சுச்சிதம், ரம்மியம், நவீனம் 8-ம் பக்கம்; எரிபொருள் சிக்கனம் 14-ம் பக்கம்; நலமான இதயம், வளமான வாழ்வு 16-ம் பக்கம்; அறுபது ஆண்டுகளாக மகிழ்ச்சி 18-ம் பக்கம்; நம்பிக்கையுடன் சுகமாக வீடு திரும்புவது 20, 21-ம் பக்கங்கள்; பெட்ரோல் விலை உற்சாகமூட்டுவதாக இல்லை, ஆகையால்... 30-ம் பக்கம்; 1987-ம் வருட புதிய முகாம் விவரம் 38-ம் பக்கம்; மேலும், பாருங்களேன் பாதுகாப்பை; இன்பமான தூக்கம், இனிதான கனவு; விசேஷ சலுகை... இன்னும் பல.


# பிரச்னை ஒன்று — பார்வைகள் பல

பலவித நோக்கங்களும், பார்வைகளும் இலங்கைத் தமிழர் பிரச்னையைத் தொடர்ந்து பாதித்துக் கொண்டிருக்கின்றன. ஏற்கெனவே சிக்கலான பிரச்னையை, வேறுபட்ட இந்தப் பல நோக்கங்களின் மோதல், மேலும் சிக்கலாக்கிக் கொண்டேயிருக்கிறது. அந்த நோக்கங்களைப் பார்ப்போம்.





## ராஜீவ் காந்தி:

இலங்கையில் தமிழர்கள் தொடர்ந்து அரசினால் துன்புறுத்தப்படுவதும், ராணுவத்தினால் கொலை செய்யப்படுவதும், மிகவும் வேதனைக்குரிய விஷயங்களே. இந்தக் கொடுமையைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டியது என்னுடைய கடமை தான், பொறுப்புதான். ஆனால், இதை மனதில் கொண்டு இந்தியாவில் தங்கியிருக்கும் இலங்கை தீவிரவாதிகளுக்கு என்னுடைய அரசு முழு ஆதரவைக் கொடுக்க வேண்டும் என்று எதிர்பார்த்தால், அது எப்படிச் சாத்தியமாகும்?

பஞ்சாப் தீவிரவாதிகளுக்கு பாகிஸ்தான் தரும் ஆதரவையும், உதவியையும் ஒருபுறம் வன்மையாகக் கண்டித்துக் கொண்டு, மறுபுறத்தில் என்னுடைய அரசு இப்படிச் செயல்பட முடியுமா? பஞ்சாப் தீவிரவாதத்தின் தோற்றத்திற்கும், இலங்கைத் தமிழ் தீவிரவாதத்தின் தோற்றத்திற்கும் இடையே முக்கியமான வித்தியாசங்கள் உண்டுதான். ஆனால், தோற்றத்தில் இருக்கும் வித்தியாசம், வளர்ச்சியிலோ, வழிமுறைகளிலோ, இலக்குகளிலோ இல்லை. தீவிரவாதிகளுக்குப் பரிபூரண ஆதரவு தருவது என்பது இன்றைய நிலையில் சரியான வழிமுறையாக இருக்காது. அதேசமயத்தில் பேசாமல் இருப்பது பாவமாகவே ஆகிவிடும்.

ஜெயவர்த்தனவைப் பெருமளவு இறங்கி வரச்செய்திருப்பதில் இந்திய அரசுக்கு ஒரு முக்கியப் பங்கு உண்டு என்றுதான் நான் நினைக்கிறேன். தீவிரவாதிகளின் அணுகுமுறைகளில் உள்ள விபரீதத்தன்மையைத் தமிழக மக்களும் ஓரளவு உணர ஆரம்பித்திருக்கிறார்கள் என்றும் தோன்றுகிறது. ஒருபுறம் ஜெயவர்த்தனவும், ஒருபுறம் தீவிரவாதிகளும் பிடிவாதமான நிலைகளை மேற்கொண்டு நிற்கிறார்கள். ஏதாவது ஒரு வகையில் இதற்குத் தீர்வு கிடைத்தால் போதும் என்ற நிலைக்கு என்னுடைய யோசனை போய்க் கொண்டிருக்கிறது. முயற்சிகள் தொடர்கின்றன என்பதற்கு மேல் என்னால் எதுவுமே சொல்ல முடியவில்லை.

## அமிர்தலிங்கம்:

சுதந்திரத் தமிழ்நாடு — தனி ஈழம் என்றெல்லாம் பிரசாரம் செய்து பாராளுமன்றத் தேர்தலில் எங்கள் கட்சி கணிசமான வெற்றிகளைப் பெற்றது. இப்போது அது நடக்கும் என்ற எண்ணம் எனக்குப் பெரிதும் குறைந்து விட்டாலும், அதை வெளிப்படையாக ஒப்புக்கொள்ளும் மனோதைரியம் வரவில்லை. 'நாம் கேட்பதை அதிகமாகக் கேட்டால்தான், அவர்கள் கொடுப்பது அதில் பாதியாவது தேறும்' என்பதால், அரசியலில் பிரமாதமான தீர்மானங்களைப் போட்டு விடுகிறோம். தமிழகத்தில் தி.மு.க. 'அடைந்தால் திராவிட நாடு, இல்லையேல் சுடுகாடு' என்று சொல்லிவிட்டு, பிறகு திடீரென்று அதைக் கைவிட்டு விட்டது. அப்படி என்னால் செய்ய முடியவில்லை. இந்தியா முன்னின்று தனி ஈழம் இல்லாமலே ஒரு தீர்விற்கு ஏற்பாடு செய்து விட்டால் கூட, நான் சமாளித்துக் கொள்வேன். 'இந்தியாவின் வார்த்தைக்கு மதிப்புத் தர வேண்டியது அவசியம் என்பதால், இந்தத் தீர்வை ஏற்கிறோம்' என்று நான் கூற வாய்ப்புக் கிடைக்கும். இதற்கு ஏற்ப, இலங்கைத் தமிழ் மக்களை பிரசாரத்தின் மூலமாக நான் தயார் செய்ய வேண்டும்.

ஆனால், நான் இலங்கைக்கு இப்போது போவதில் விவேகம் இருக்காது. சிங்கள ராணுவத்திற்குப் பயந்து நான் இதைச் சொல்லவில்லை. விடுதலைப் புலிகளின் எண்ணத்தை நினைத்துச் சொல்கிறேன். இலங்கைத் தமிழர்களால் ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய தலைமை இது — என்ற தோற்றத்தை யார் அளித்தாலும், அவர்களைத் தீர்த்துக் கட்டுவது என்று விடுதலைப் புலிகள் தீர்மானமாக இருக்கிறார்கள். அப்போதுதானே அங்கு பிரபாகரனின் சர்வாதிகாரத்தை நிலைநாட்ட முடியும்? இந்த நிலையில் நான் எப்படி இலங்கைக்குப் போவது? யோசிக்கிறேன். யோசித்துக் கொண்டே இருக்கிறேன்...

## பிரபாகரன்:

நானே ராஜா! அதை இலங்கைத் தமிழர்களும், இந்திய அரசும், ஜெயவர்த்தனவும் ஒப்புக் கொள்ள வேண்டும். போட்டியாளர்களையெல்லாம் தீர்த்துக் கட்டிக் கொண்டிருக்கிறேன். மக்களால் அறியப்பட்ட, மக்களால் ஏற்கப்படக் கூடிய முக்கியஸ்தர் வேறு யாருமே கிடையாது — என்ற நிலை தோன்றி விட்டால், அதற்குப் பின் ஜெயவர்த்தன யாருடன் பேசுவார்? இந்திய அரசு யாருக்காக வக்காலத்து வாங்கும்? அந்த நிலை தோன்றுவதற்காக மற்றவர்களை ஒழித்துக் கட்டுகிறேன். வேறு ஏதாவது தலைமையின் கீழ் இலங்கைத் தமிழர் பகுதிகள் இயங்கக் கூடிய ஒரு ஏற்பாட்டை அமல்படுத்தத் தீர்மானம் செய்யப்பட்டால், நான் பார்த்து விடுவேன் ஒரு கை! அப்போது என் வன்முறை அந்தத் தலைமைக்கு எதிராகத்தான் தொடரும். அவர்களுக்கு நிம்மதி இருக்காது.

மாறாக, 'நானே ராஜா' என்ற என் கொள்கையை ஏற்று, ஒரு தீர்மானம் கொண்டு வரப்பட்டால், நான் 'தனி ஈழம்' கேட்டுப் பிடிவாதம் பிடிக்க மாட்டேன். இந்தியா இதற்கு உதவ வேண்டும். அதுதான் இந்தியாவின் கடமை. இந்தியர்களின் கடமை.

## மற்ற தீவிரவாத இயக்கங்கள்:

நாங்கள் மரணப் படுக்கையில் இருக்கிறோம். எங்களுடைய கடைசி ஆசை இதுதான் — பிரபாகரனுக்கு அதிகாரம் போகக் கூடாது. அப்படிப் போனால் — நாங்கள் உயிரோடு இருந்தாலும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சரி, ஆவியாக இருந்தாலும் சரி, தொல்லை விளைவிப்போம்.

## ஜெயவர்த்தன:

இந்தியாவை நினைத்துத்தான் பயப்பட வேண்டி இருக்கிறது. இந்தியா நினைத்தால் எங்களை ஒரே நொடியில் அடக்கி விட முடியும். இந்தப் பயம் இல்லாவிட்டால், ராணுவத்தைப் பரிபூரணமாக ஏவி, சாதாரண அப்பாவி மக்களுக்கு விளையக் கூடிய நாசத்தையும் பற்றி சற்றும் கவலையில்லாமல், பயங்கர நடவடிக்கைகளை எடுத்து, தீவிரவாதிகளைத் தீர்த்துக் கட்டியிருப்பேன். இப்போது கூட எங்கள் ராணுவம் எடுக்கும் நடவடிக்கைகளில் அவ்வப்போது தயக்கம் காட்ட நேரிடுவது, தீவிரவாதிகளினால் அல்ல — இந்தியா என்ன செய்யுமோ என்ற பயத்தினால்தான். அரசியல் தீர்வுக்கு நான் தயார்தான். ஆனால், சிங்கள மெஜாரிட்டி மக்கள் என்னைத் தூக்கி அடித்து விடும் அளவுக்கு அந்தத் தீர்வு அமையக்கூடாது. நான் வயதானவன்தான். அதற்காக 'பதவி போனால் பரவாயில்லை' என்றா நான் நினைப்பேன்? நானும் அரசியல்வாதிதானே!





இப்போது நான் தர முன் வந்திருப்பதற்கு மேலாக அரசியல் உரிமைகளையும், வாய்ப்புகளையும் தருவதற்கு நான் ஒப்புக் கொண்டால், சிங்கள மக்கள் என் மீதே திரும்புவார்கள். என் கட்சியிலுள்ள சிலர் என்னைக் கவிழ்க்க நானே உதவி செய்தது போல் ஆகிவிடும். இந்த தர்மசங்கடமான நிலையில் ஒரே ஒருவர்தான் எனக்கு நல்ல உதவி செய்திருக்கிறார். அவர்தான் விடுதலைப் புலி இயக்கத் தலைவர் பிரபாகரன். மற்ற இயக்கத்தினர் பலரை இவர் கொலை செய்து ஒடுக்கி விட்டதால், என்னுடைய ராணுவத்திற்கு நல்ல வசதியும், வாய்ப்பும் ஏற்பட்டது. எங்கள் ராணுவம் தமிழர் பகுதிகளில் முன்னேற வழி செய்து கொடுத்த பிரபாகரனுக்கும், அவரது இயக்கத்தினருக்கும் நன்றி.

வேறு ஒரு வகையிலும் இந்த நிலை எங்களுக்கு நல்லதுதான். பல இயக்கத்தினருடன் பேச்சு வார்த்தை நடத்திக் கொண்டிருப்பதற்குப் பதிலாக, பிரபாகரனுடன் மட்டுமே பேச்சு வார்த்தை என்பதும் வரவேற்கத்தக்கதுதானே! பலரைச் சமாதானப்படுத்துவது கஷ்டம். ஒருவரை சமாதானப்படுத்த பல வழிகள் இருக்கும். காந்தியையும், புத்தரையும் மேற்கோள் காட்டிக் கொண்டே எனக்கு வசதியான வழியை நான் மேற்கொள்ள முடியும்.

புதிதாக வரக்கூடிய அமைப்பில் பிரபாகரன் அதிகாரம் செலுத்தினால் எனக்கு என்ன நஷ்டம்? சொல்லப் போனால் அதுவும் நல்லதுதான். கொஞ்ச நாள் பிரபாகரனிடம் அதிகாரம் இருந்தால் போதும் — இலங்கைத் தமிழர்களே கூட 'இதற்கு ஜெயவர்த்தனவே மேல்' என்று பேச ஆரம்பித்து விடுவார்கள். பிரபாகரனுக்கு மீண்டும் நன்றி.

## ஸ்ரீமாவோ பண்டாரநாயக:

பலவிதமான அரசியல், கலாசார சலுகைகளை அளிக்காமல், தமிழர் பிரச்னையைத் தீர்க்க ஜெயவர்த்தனவால் முடியாது. அவர் என்ன சலுகை அளித்தாலும் சரி, அதை நான் எதிர்ப்பேன். இந்தப் பிரச்னையை வைத்துத்தான் நான் தேர்தலையே சந்திப்பேன். சிங்களர்களுடைய மதவெறி பெட்ரோல் போன்றது. நான் நெருப்புப் பொறி. இதற்கு இடையில் அகப்பட்ட பஞ்சாகத்தான் எந்தச் சமரச ஒப்பந்தமும் இருக்கும்.

## எம்.ஜி.ஆர்.:

மத்திய அரசிடம் நான் பயப்படுவதற்குப் பல காரணங்கள், பல விவகாரங்கள் இருக்கின்றன. எங்கள் ஆட்சியில் நடந்துள்ள ஊழல்களைப்பற்றி மக்களிடம் சந்தேகம்தான் இருக்கிறது — ஆனால், மத்திய அரசிடம் நிரூபணமே இருக்கிறது. இந்த நிலையில் மத்திய அரசு என்ன சொன்னாலும் நான் கேட்க வேண்டியதுதான். ஆனால், இலங்கைப் பிரச்னை வந்ததால், எனக்கு ஒரு வசதி கிட்டியது. பிரபாகரன் என்னுடைய போஷாக்கில் இருப்பதால், எனக்கு ஒரு பெரிய லாபம். நான் சொன்னால் பிரபாகரன்






கேட்பார் என்பதை நினைத்து, மத்திய அரசே அடிக்கடி என்னுடைய உதவியை நாட வேண்டியிருக்கிறது. ஆனால், சமரசத்திற்கு ஒப்புக்கொள்ளுமாறு நான் பிரபாகரனைத் தூண்டி விட்டால், அது எனக்கே ஆபத்தாக முடியும். ஏனென்றால் அதற்குப் பிறகு மத்திய அரசுக்கு என் உதவி தேவைப்படாதே? பிரச்னை தீர்ந்து விட்டால் அதற்குப் பிறகு நான் எதற்கு?

பிரபாகரன் ஒரு தடைக்கல்லாக, பிரச்னையாக இருக்கும் வரைதான், மத்திய அரசுக்கு மத்தியஸ்தம் பேச என் உதவி தேவைப்படும். ஆகையால், நான் ஒரு நாடகமாட வேண்டியிருக்கிறது. மத்திய அரசுப் பிரதிநிதிகளின் எதிரில் சமரசத்திற்கு ஒப்புக் கொள்ளுமாறு பிரபாகரனை வலியுறுத்துகிறேன். பிறகு பிரபாகரனிடம் தனிமையில், 'ஒப்புக் கொள்ள வேண்டாம்' என்று கூறி விடுகிறேன். எனக்கு வேறு வழியில்லையே?

அதே சமயத்தில் பிரபாகரனையும் முழுமையாக நம்பிவிட முடியாது. அதனால்தான், அவ்வப்போது ஒயர்லெஸ் செட்டைப் பிடுங்குவது, ஆயுதங்களைப் பறிப்பது என்று பூச்சாண்டி காட்டி பிறகு, போலீஸார் மீது பழி போட்டு, பிடுங்கியதைத் திருப்பிக் கொடுத்து விடுகிறோம்.

இலங்கைப் பிரச்னை தீர்ந்து விட்டால், மத்திய அரசிடம் என் கதி என்ன ஆவது? அப்படியெல்லாம் உடனே நடக்காது. ஜெயவர்த்தனவையும், பிரபாகரனையும் நம்புகிறேன்.





## கருணாநிதி:

ஹிந்திப் பிரச்னையோ, வேறு பிரச்னையோ இல்லாத போது ஒரு ரெடிமேட் மேடையாக இலங்கைப் பிரச்னை இருந்து வருகிறது. அது தீர்க்கப்பட்டாலும் அந்த மேடை இருக்கும்.

தீர்வு எதுவாக இருந்தாலும் சரி, 'மத்திய அரசும், எம்.ஜி.ஆரும் சேர்ந்து தமிழர்களுக்குத் துரோகம் செய்து விட்டார்கள்' என்று பிரச்சாரம் செய்ய வேண்டியதுதானே!

## இலங்கைத் தமிழர்கள்:

நாங்கள் படும் துன்பமும், வேதனையும் சொல்லி முடியாது. ஒருபுறம் சிங்கள ராணுவத்தின் காட்டுவெறி, மறுபுறம், தீவிரவாதிகளின் அட்டகாசம். இரண்டிற்கும் நடுவில் சிக்குண்டு தவிக்கிறோம், சாகிறோம்.

ஈழம் என்ற சுதந்திர நாடு கிடைத்து விடும் என்றுதான் முதலில் நம்பினோம். அந்த அளவுக்கு இங்கு பிரச்சாரம் செய்தார்கள். இப்போது அந்த நம்பிக்கை பெரிதும் தகர்ந்து விட்டது. சிங்கள மக்களோடு, சரிநிகர் சமானமான உரிமைகளும், தமிழ் மொழிக்கான உரிய அந்தஸ்தும், ஆபத்து இல்லாத வாழ்க்கைக்கு உத்திரவாதமும், இந்தியாவில் உள்ளது போன்ற அதிகாரங்களைப் பெற்ற மாநில ஆட்சி அமைப்பும் கிடைத்தால், அது வரவேற்கப்படக் கூடிய நிவாரணமாகவே இப்போது எங்களுக்குத் தெரியும்.

இதற்கான வழிமுறைகளை இந்தியாதான் மேற்கொள்ள வேண்டும். சிங்களவர்களின் இனவெறி, எங்களவர்களின் அதிகார வெறி இரண்டிற்குமிடையே அகப்பட்டுத் தவிக்கிறோம். காப்பாற்றுவது இந்தியாவின் கடமை. ●



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்